# தர்பூசனி சாகுபடி

கோடை காலத்தில் முன்னனி பழமாக தர்பூசனி உள்ளது. கலகாரி பாலைவனமான ஆப்பிரிக்காவே தர்பூசனிக்கு பூர்வீகம். தர்பூசனி கோடைகாலத்தில் தண்ணீர் தாகத்திற்காக விரும்பி உண்ணக்கூடிய பழமாக உள்ளது. இதில் முக்கிய வைட்டமின்களான வைட்டமின் ஏ, ஏ1, ஏ2 மற்றும் தாது உப்புக்களும் அடங்கி உள்ளன. தமிழ்நாட்டில் விழுப்புரம் மற்றும் கோவை மாவட்டத்தில் மட்டுமே தீவிர தர்பூசனி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சில இடங்களில் வருடம் முழுவதும் பயிர் செய்கிறார்கள். தர்பூசனி உடலுக்கு நல்லது இதிலுள்ள இனிப்பு புத்துணர்ச்சி அளிக்க கூடியது.

**முக்கிய ரகங்கள்**

அர்கா மானிக், அர்கா ஜோதி, பி.கே.எம்-1, சுகர்பேபி, பூசா பென்டானா மற்றும் எ.ஃப்-1, எச்.ஓய்.பி.395 முதலிய ரகங்கள் விவசாயிகள் மத்தியில் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

**மண்**

நல்ல வடிகால் வசதியுள்ள அங்ககப் பொருட்கள் நிறைந்த கார அமிலத்தன்மை (pH) 6.5-7.5 மண் தர்பூசனி சாகுபடிக்கு ஏற்றது.

**பருவம்**

நவம்பர்–டிசம்பர், ஜனவரி-பிப்ரவரி

**விதையளவு**

ஏக்கருக்கு 1.4 கிலோ

**விதைநேர்த்தி**

விதையை டிரைக்கோடர்மா விரிடி 4 கிராம். (அ) சூடோமோனாஸ் புளுரோசின்ஸ் 10 கிராம் (அ) கார்பன்டசிம் 2 கிராம். ஒரு கிலோ விதைக்கு என்ற விகிதத்தில் கலந்து விதைப்பு செய்ய வேண்டும்.

**இடைவெளி**

60 செ.மீ அகலத்தில் 2.5 மீ. இடைவெளியில் நீண்ட கால்வாய் எடுத்து அதில் 45 செ.மீ. கன அளவுள்ள குழிகளை, 90 செ.மீ. இடைவெளியில் எடுக்க வேண்டும்.

## நடவு முறை

விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை குழிக்கு 5 வீதம் இட்டு முளைத்தவுடன் குழிக்கு இரண்டு நாற்றுகளை மட்டும் விட்டு மற்றவைகளை களைய வேண்டும்.

## நீர் பாசனம்

விதை நடவு செய்வதற்கு முன்பும், நடவு செய்த மூன்றாவது நாள் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். பிறகு மண்ணின் தன்மைக்கேற்ப வாரம் ஒரு முறை நீர்ப்பாய்ச்சினால் போதுமானது.

## உர நிர்வாகம் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| அடி உரம் | : | தொழு உரம் 10 கிலோ குழிக்கு |
| | | யூரியா – 48 கிலோ |
| | | சூப்பர் பாஸ்பேட் - 138 கிலோ |
| | | மூரியேட் ஆப் பொட்டாஷ் - 35 கிலோ |

## பின்செய் நேர்த்தி

விதைத்த 15ம் நாள் (அ) விதை இலை தவிர இரண்டு இலை பருவத்தில் எத்ரல் 250 பி.பி.எம். (2.5 மி.லி. / 10 லி. தண்ணீர்) வீதம் ஒரு வார இடைவெளியில் நான்கு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதனால் பெண் பூக்கள் எண்ணிக்கை அதிகமாகி நல்ல மகசூல் கிடைக்கும். 2-3 முறை களை எடுத்தல் அவசியம். பழங்களை வைக்கோல் கொண்டு அடிபாகத்தையும் மேலேயும் மூட வேண்டும்.

## பயிர் பாதுகாப்பு

| | | |
|---|---|---|
| வெள்ளை ஈ மற்றும் பழ ஈ | : | மாலத்தியான் 1 மி.லி. / லி. நீர் (அ) |
| | | வேப்பங்கொட்டை சாறு 5 மி.லி. / லி. நீர் |
| வண்டுகள் | : | கார்பரில் 2 கிராம் /லி. நீர் |
| அசுவினி | : | டைமீத்தோயேட் 30 இசி 2 மிலி/ லி. நீர் (அ) |
| | | மீத்தைல் டெமட்டான் 25 இசி 2 மிலி/ லி. நீர் |
| சாம்பல் நோய் | : | டினோகாப் 0.5 மிலி (அ) கார்பன்டசம் 0.5 கி/லி. |

வீதம் கலந்து 25, 40, 55வது நாட்களில் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்

**அறுவடை**

பழங்கள் முதிர்ச்சி அடைந்ததற்கான அறிகுறியாக பழங்களின் மேலுள்ள பச்சைநிற புள்ளிகள் மஞ்சள் நிறமாக மாறும். மேலும் பழத்தை தட்டிப் பார்க்கும் பொழுது உலோக சத்தம் கேட்கும்.

**மகசூல்**

10-12 டன் / ஏக்கர் 120 நாட்களில் கிடைக்கும்.

**குறிப்பு :** **டிடிடி, லின்டேன் 1.3 சத தூள், தாமிரம் மற்றும் கந்தகத்தூள் பயன்படுத்தக் கூடாது.**